**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 18 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 18 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் சோறன்பற்று கொத்திக்குளம் மயான வேலைத்திட்டத்திற்கு ரூபா 475,000 சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட வேலையானது நிறைவேற்றப்படாது நிலையானசொத்தாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதனால் கட்டட பெறுமதி ரூபா 475,000 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. | வேலைகள் தற்போது 90 வீதம் பூர்த்தியடைந்துள்ளளது | வேலைத்திட்டங்கள் உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |
| (ii) | கடைக்கான மீளளிக்கப்படாத கேள்வித்தொகை ரூபா 151,100 வருமானமாக கணக்குகளில் | தற்போது வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது | வருமானங்கள் உரிய நிதியாண்டில் உரிய தலைப்புக்கேற்ப காட்டப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்படாது அரசிறை வைப்பு மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளமையால் வருமானம் ரூபா 151,100 குறைத்து நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது. | | |
| (iii) | நிறைவேற்றப்படாத சங்கனி மயான வேலைத்திட்டத்திற்கு கடந்த வருடம் சில்லறைக்கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 580,000 மீளாய்வாண்டில் குறித்த வேலை செய்யப்பட்டிராது திரண்டநிதிக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் நாட்குறிப்பு எதுவும் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உறுதிச்சீட்டு மூலம் திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டு மாதாந்த கணக்கறிக்கையில் குறிப்பிடப்பட்டு திரண்டநிதிக்கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | முன்னையகால விடயங்கள் நாட்குறிப்பு பதிவுகளினூடாக சீராக்கப்படல் வேண்டும் |

## 1.4 இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 945,944 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 36 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சில வைப்புக்கள் மீளளிக்கப்பட்டுள்ளன. மிகுதி வைப்புக்களை மீளளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடம்) 1989 ஏப்ரல் 17 ஆம் திகதி இன் 12 வது பலவின உரிமங்கள் விடயத்தில் 75 ஆவது பிரிவு | - | சபையினால் நிலவாடகையாக வழங்கப்பட்டுள்ள 08 வியாபார நிலையங்களிற்கு வியாபார உரிமம் வழங்கப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் | வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நிதி திட்டமிடல் அமைச்சின் 2012.01.05 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை 1/2012 இன் பிரிவு 3.3 | 1,190,000 | ஒப்பந்தங்களை வழங்கும் போது சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் 03 ஒப்பந்தங்களை விட கூடிய ஒப்பந்தங்களில் ஈடுபட முடியாது எனக்குறிப்பிடப்பட்டிருந்தும் சனசமூக நிலையமொன்றிற்கு 05 வேலைத்திட்டங்கள் 03 மாத காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்தமை அரச நிதி சுற்றறிக்கைக்கு மாறான விடயமாகும் | வேறு சனசமூக நிலையங்கள் முன்வராத காரணத்தினால் வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களில் ஒப்பந்தங்கள் வழங்கப்படமாட்டாது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஈ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசு வடமாகாண சபை மாகாண நிதிவிதி – 2008 இல் 163.3(ii) | 4,709,367 | 12முற்பணக் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 10 முற்பணங்கள் சீர் செய்யப் பட்டுள்ளது. மிகுதி சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (உ) | ஏனைய சுற்றறிக்கைகள் | | | | |
| | உள்ளூராட்சி ஆணையாளர், வடமாகாணம் அவர்களின் 2016 யூலை 25 திகதிய 04/2016 சுற்றறிக்கை | 1,719,617 | அரசிறை அறவீடு, நிலுவை அறவீடு பற்றிய மாதாந்தக் கூற்று – பி.ச 07 கணக்கறிக்கை மாதாந்தம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் பி.ச-07 தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடம் மாதாந்தம் தயாரிக்கப்பட்டு வருகின்றது | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,595,526 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,215,468 தொகையாக இருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை வங்கியின் C-2713 இலக்க நடைமுறைக் கணக்கு மீதியானது ரூபா 17,453 ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கைகள் ஏதும் இல்லாமல் தொடர் மீதியாக பேணப்பட்டு வருகின்றமை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கணக்கு நிலுவையானது முடிவுறுத்தப்பட்டு நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுவதற்கு வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கணக்கினை முடிவுறுத்தல் வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படியான நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 4,284,722 | 5,332,209 | 233,434 | 3,458,724 | 4,395,050 | 332,510 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 432,500 | 523,216 | 1,500 | 434,500 | 835,464 | 8,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 45,066,571 | 54,678,424 | 1,484,683 | 46,910,356 | 23,378,957 | 4,935,862 |
| | | 49,783,793 | 60,533,849 | 1,719,617 | 50,803,580 | 28,609,471 | 5,276,572 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையானது தனது வருமானத்தினை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு ஆக்கபூர்வமான | வருமானங்கள் பட்டியலின் மூலம் அறவிடப்படுகின்றது. முறையாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பட்டியல்படுத்தி வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக எடுத்திருக்கவில்லை. | | வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டில் ரூபா 1,719,617 நிலுவையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் இந்நிலுவைகளை அறவிடுவதற்கு 1 தொடக்கம் 7 வருடங்களுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,448,563 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | உரிய காலத்தில் வருமான நிலுவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும் |
| (இ) சபையின் புலோப்பளை உப அலுவலகத்தில் இனங்காண முடியாத நிலவாடகை வருமதியாக ரூபா 42,017 கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளதுடன் இவற்றை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | உரிய காலத்தில் நிலுவைகளை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1989 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டுக்கு வீதவரி வருமானங்கள் மதிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**2.3.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலவாடகை ஒப்பந்தத்தில் தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட கடைகளிற்கு 23 எண்ணிக்கையான சீமெந்திலான நிரந்தரகட்டட அமைப்பினையுடையதும் தனித்தனியான மின்சார இணைப்புக்களையும் கொண்ட கட்டட அமைப்பானது நிலவாடகை முறையிலேயே வாடகை அறவீடு செய்யப்படுகின்றது. | ஒப்பந்ததாரர் ஒப்பந்தங்களுக்கு முரணாக நிரந்தர கடைகளை அமைத்துள்ளமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | சபையின் வாடகை ஒப்பந்தத்தில் அமைக்கப்பட்ட 02 எண்ணிக்கையான கடைகள் சபை அனுமதியின்றி உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | ஒப்பந்தத்தின் பிரகாரம் உப வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | நிலவாடகையில் அமைக்கப்பட்ட வியாபார நிலையங்களுக்கு வியாபார உரிமம் வழங்கல் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | வியாபார உரிமம் வழங்கப்படல் வேண்டும் |

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 654,167 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 584,397 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | கோரிக்கைக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

**(அ) உபவிதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 33 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் எதுவித உபவிதிகளும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது நியமத்துணைவிதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் வருமான விபரங்களை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் உருவாக்கப்படல் வேண்டும் |

**(ஆ) கைவிடப்பட்ட வேலைத்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான 02 வேலைத்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட விளைவினைப் பெற்றுக்கொள்ளப்படாது செயற்பாடுகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தது. | சிறுவர்பூங்கா அமைத்தல் கம்பெரலியா திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு மையம் அமைத்தல் பெருத்தமான திணைக்களங்களிடம் அனுமதி பெறவேண்டியிருந்ததன் காரணமாக திட்டமானது மாற்றப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. | பாதீட்டின்படி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |

**(இ) பணிகளின் நிறைவேற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைநிதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட 04 | 03 வேலைகள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் | வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் |

| | | |
|---|---|---|
| வேலைத்திட்டங்கள் ரூபா 1,105,000 ஒப்பந்தகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 01 வேலை நடைபெற்று வருகின்றது. | பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) சபையின் 2019 நவம்பர் 15 ஆம் திகதிய 24 ஆம் இலக்க தீர்மானத்தில் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக மீள்சுழற்சி பொருட்களை சேகரிப்பதற்கான நாட்கள் மற்றும் இடங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்டிருந்ததாயினும் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய நடைமுறைகள் அறிக்கையிடும் திகதி வரையும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை | குறித்த விடயத்தினை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது | தீர்மானத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ii) சபையின் எல்லைக்குட்பட்ட கழிவுகளை வீடுகள், கடைகள், கோட்டல்கள், மரக்கறி மற்றும் பழவிற்பனை நிலையங்கள், இறைச்சிக்கடைகள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், பொதுஇடங்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்படுகின்ற கழிவுகள் இடத்தின் தன்மைக்கேற்றவாறு திண்மக்கழிவு வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப் பட்டிருக்கவில்லை. | ஆளணி பற்றாக்குறை காரணமாக வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப்படவில்லை. நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | திண்மக்கழிவு முகாமைத்துவ முறைமை பின்பற்றப்பட வேண்டும் |
| (iii) சபையினால் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் எவையும் வழங்கப்பட்டிருக்காததுடன் | எதிர்காலத்தில் இது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கான நடவடிக்கை | பயிற்சிகள் வழங்குவதுடன் மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 02 சுகாதார தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மேற்கொள்ளவேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளது | |
| (iv) | நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் மண்தட்டு இடப்பட்டு மூடப்படாமையினால் கொசுக்கள், நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக அமைந்திருப்பதுடன் சூழல் துர்நாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. | மிருகக்கழிவுகளை கிடங்கு வெட்டி புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சூழல் பாதிப்படையாமல் செயற்படல் வேண்டும் |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | கழிவுகளை பிரிக்கக்கூடிய வெவ்வேறு பொதிமுறைமை நடைமுறைப்படுத்தப்படாது சேகரிக்கப்படும் கழிவுகள் எரியூட்டப்படுவதனால் சூழல் பாதிப்படைகின்றது. | குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளபபடும் | சூழல் பாதிப்படையாமல் கழிவுகள் அழிக்கப்படல் வேண்டும் |
| (ii) | திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளபபடும் | சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நீண்டகால அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூபா 3,398,505 பெறுமதியில் புனரமைக்கப்பட்ட தம்பகாமம் அரசர்கேணி இணைப்பு வீதியானது 150 மீற்றர் தூரம் அளவிற்கு பாரிய சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டு மக்களது பயன்பாட்டிற்கு உட்படுத்த முடியாது காணப்படுகின்றது. | தற்போது மீள்புனரமைக்கப்பட்டுள்ளது | வீதி அமைக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படல் வேண்டும் |
| (ii) | 2015 ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று ஏற்பட்ட வாகன விபத்தினால் வாகன திருத்தத்திற்கு ரூபா 674,407 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவற்றில் காப்புறுதி கம்பனியிடமிருந்து ரூபா 526,407 பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 147,820 சபையால் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும் முற்பணமாக வழங்கப்பட்ட வாகன விபத்து நட்டத்தினை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் நாளதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை | தற்போது சாரதியிடமிருந்து பகுதிபகுதியாக அறவிடப்பட்டு வருகின்றது | நிதிஒழுங்கு விதிக்கமைய செயற்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (iii) விலைமதிப்பீட்டு திணைக்கள மதிப்பீடுகள் பெறப்படாது 23 எண்ணிக்கையான நிலவாடகை கடைகளுக்கு சபையால் வாடகை பெறப்பட்டு வருகின்றது | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**<br>2019 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 76 ஆகவும் உள்ளவாறான ஆளணியினர் எண்ணிக்கை 58 ஆகவும் இருந்ததுடன் இதுவரை 18 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் . | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடங்களில் காசு மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 242,989 இற்கு கடந்த வருட காசு மெய்மையாய்வில் குறித்த மீதி காட்டப்படாது மீளாய்வாண்டில் திரண்டநிதிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையினால் திரண்டநிதி குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது | 2018 ஆம் ஆண்டின் காசுமீதியானது இரட்டிப்பாக காட்டப்பட்டதனால் 2019 ஆம் ஆண்டு திரண்டநிதிக்கணக்கில் சீர்செய்யப்பட்டுள்ளது. | உரிய கணக்குகளில் உரிய காலத்தில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும் |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் உள்ள 17 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | உரிமை மாற்றம் செய்யப்படல் வேண்டும் |

#### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 எண்ணிக்கையான நீர்த்தாங்கி வாகனமும் இணைப்பும் மற்றும் 01 எண்ணிக்கையான Gally Bowser என்பன மோட்டடர் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவிடப்படாது பிரதேச செயலக வருமானவரி உத்தரவுச் சான்றிதழ் பெறப்படாததுடன் காப்புறுதியும் செய்யப்பட்டிருக்கவில்லை | மீள்குடியமர்வின் போது எந்தவித ஆவணங்களும் அன்றி பெறப்பட்டுள்ளது. எனவே பதிவுகள் மேற்கொள்ள முடியாதுள்ளது. | பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டியதுடன் காப்புறுதியும் செய்யப்படல் வேண்டும் |

#### 3.5.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ள தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| RB - 9600 இலக்க உழவு இயந்திரம் 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. | திருத்த மதிப்பீடு பெறப்பட்டு பொறியியலாளரின் சிபார்சிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.6 பெறுகை**

**3.6.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழான மூலதன வேலைத்திட்டங்கள் ஒப்பந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்காது ஒப்பந்தகாரரினால் வழங்கப்படுகின்ற காலநீடிப்புக்களுடன் வேலை நிறைவேற்றப்பட்டிருந்தும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபார்சு பெறப்படாமையினால் காலநீடிப்புக்கள் உரிய காலப்பகுதியில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் காலதாமத தண்ட அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இறுதிக்கொடுப்பனவு வழங்கப்படும் போது தண்டம் அறவிடப்பட்டே கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. | காலதாமத தண்ட அறவீடு அறவிடப்படல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட வேலையினை மாற்றம் செய்யப்பட்டமையினால் மீளாய்வாண்டில் விநாயகபுரம் மற்றும் கரந்தாய் பகுதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விநாயகபுரம் பகுதியில் சபை நிதி தவிர்ந்த வேற நிதி மூலங்களின் மூலம் குறித்த பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படாமையினால் சபை நிதி மூலமாக வேலைகள் இடம்பெறவில்லை. | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டிற்கமைய வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |